செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 360 நாள் 19-6-17

# பத்திரிக்கைச் செய்தி

## சிறுபான்மையினர் சமுதாயத்தை சார்ந்த மாணவ/மாணவியர்களுக்கு கல்வி கடன் வழங்கும் திட்டம்

சிறுபான்மை வகுப்பை சேர்ந்த கிறித்தவ, இஸ்லாமிய, சீக்கிய, புத்த, பார்சி மற்றும் ஜெயின் மாணவ/மாணிவியருக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் இளங்கலை/முதுகலை தொழிற்கல்வி/தொழில்நுட்பக்கல்வி மற்றும் குறுகிய கால உயர்திறன் வளர்ச்சி படிப்பு பயில்பவர்களுக்கு (Short Term High Skill Development) குறைந்த வட்டி விகிதத்தில் கல்வி கடன் வழங்கும் திட்டம் (Education Loan Scheme) டாம்கோ மூலம் செயற்படுத்தப்படுகிறது. இதற்கான நிதி NMDFC மூலம் வழங்கப்படுகிறது. கல்விக் கடனுதவி திட்டங்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி / நகர கூட்டுறவு வங்கி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் சேர்க்கை கட்டணம் / பயிற்றுவிப்பு கட்டணம், புத்தகம், எழுதுபொருள் மற்றும் படிப்புக்கு தேவையான உபகரணங்கள், தேர்வுக் கட்டணம் விடுதி மற்றும் உணவுக் கட்டணம் (விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு மட்டும்) ஆகியவற்றை மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் கல்விக்கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஆண்டு வருமான வரம்பின் அடிப்படையில் 2 திட்டங்களாக செயல்படுத்தப்படுகின்றன.

<u>திட்டம்:- I</u>

இத்திட்டத்தில் ஆண்டு வருமானம் நகர்புறத்தில் 103000/- மும் கிராமபுறத்திற்கு ரு.81,000/-மும் கல்வி கடனில் தொழில்கல்வி / தொழில்நுட்ப கல்வி மற்றும் வேலைவாய்ப்பு படிப்புகளுக்கு வருடத்திற்கு ரு.3.00 இலட்சம் வீதம் அதிகபட்சம் (5 ஆண்டுகளுக்கு) ரு.15.00 இலட்சமும் முதுகலை தொழிற்கல்வி / தொழில்நுட்ப படிப்புகளுக்கு வருடத்திற்கு ரு.3.00 இலட்சம் வீதம் அதிகபட்சம் (3 ஆண்டுகள்) ரு.9.00 இலட்சம் வெளிநாடுகளில் மேற்படி படிப்புகளை பயிலுபவர்களுக்கு வருடத்திற்கு ரு.4.00 இலட்சம் வீதம் அதிகபட்சம் (5 ஆண்டுகள்) ரு.20.00 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் வழங்கப்படும் கடன்களுக்கு 3% வட்டி வழங்கப்படுகிறது.

<u>திட்டம்:- II</u>

இத்திட்டத்தில் ஆண்டு வருமானம் கிராமப்புறம் நகர்புறத்திற்கு ரு.10300 முதல் ரு.6.00 இலட்சம் வரை ஆகும். கல்விக் கடனை பொறுத்த வரையில் தொழிற்கல்வி, தொழில்நுட்ப படிப்புகளுக்கு மற்றும் வேலைவாய்ப்பு படிப்புகளுக்கு வருடத்திற்கு ரு.4.00 இலட்சம் வீதம் அதிகபட்சம் ரு.20.00 இலட்சம் வரையிலும், முதுகலை தொழிற்படிப்புகளுக்கு வருடத்திற்கு ரு.3.00 இலட்சம் வீதம் அதிகபட்சம் ரு.9.00

இலட்சம் வரையிலும் வெளிநாடுகளில் மேற்படி படிப்புகளை பயிலுபவர்களுக்கு வருடத்திற்கு ரூ.6.00 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் வழங்கப்படும் கடன்களுக்கு, மாணவர்களுக்கு 8%-மும் மாணவியர்களுக்கு 5%-மும் வட்டி விதிக்கப்படுகிறது.

திரும்ப செலுத்தும் முறை:-

மேற்படி 2 திட்டங்கள் முலமாக வழங்கப்படும் கடன்களுக்கு கல்வி பருவக்காலம் முடிந்த தேதியிலிருந்து (அ) அடுத்த ஆறாவது மாதத்திலிருந்து அல்லது பணியில் அமர்ந்த தேதியிலிருந்து இதில் எது முந்தைய தேதி அந்த தேதியிலிருந்து 60 மாத கால அளவில் கடன் தொகையினை திரும்ப செலுத்த வேண்டும் தவறும் இனங்களில் 5% அபராத வட்டி விதிக்கப்படும்.

கல்விக்கடன் புதுப்பித்தல்:-

கல்வி கடன் பெற்ற மாணவ/மாணவிகள் ஒவ்வொரு ஆண்டும் கல்விக் கடன் புதுப்பிக்க ஆண்டுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றதற்கான மதிப்பெண் சான்றிதழ்களை சம்பந்தப்பட்ட வங்கிகளில் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பிக்க படிவம்:-

வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த சிறுபான்மையினத்தை சார்ந்த மாணவ/மாணவியர்கள் தங்களது கல்வியினை இடையுறின்றி பயிலுவதற்கு மேற்குறிப்பிட்ட கல்விக் கடனுதவி திட்டங்களுக்கான விண்ணப்ப படிவங்களை வேலூர் மாவட்த்திலுள்ள கூட்டுறவு சங்கங்கள் இணைபதிவாளர் நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும், அதன் கிளைகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் கட்டணமின்றி பெற்று விண்ணப்பித்து பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- சி.அ. ராமன்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
வேலூர்.